தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 15, திருவள்ளுவர் ஆண்டு—2046

2015 செப்டம்பர் 1, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன்பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

181—

விட்டுமனைப் பட்டா

***52396—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி, அல்லிநகரம் நகராட்சி, எம்.ஜி.ஆர். நகரில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், தேனி வட்டம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் ஆக்கிரமிப்பாளர்கள் குடியிருந்துவரும் இடங்கள் ஃபாரஸ்ட் (வால்கரடு) என வருவாய் ஆவணங்களில் பாகுபடுத்தப்பட்டு உள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதி, தேனி, அல்லிநகரம் பகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எம்.ஜி.ஆர். நகர் 20—வது வார்டு மற்றும் சமதருமபுரம் 19—வது வார்டு போன்றவை வால்கரடு என்ற பகுதியில் இருக்கின்றன. 40 ஆண்டுகளுக்கும் மேலாக வால்கரடு பகுதியில் உள்ள 70, 80 வீடுகளில் மக்கள் குடியிருந்து வருகின்றார்கள். இவர்களுக்குக் குடிமனைப் பட்டாவைத் தவிர, அனைத்து ஆவணங்களும் அவர்களுடைய கையில் இருக்கின்றன. வால்கரடு என்பது* thick forest *கிடையாது. அது ஒரு குடியிருப்புப் பகுதியாகும். வகை மாற்றம் செய்து, இவற்றிற்கு பட்டா தரலாம் என்றும், ஏற்கெனவே நமக்கு* one-time *பட்டா காலத்திலே, அதற்கான விதிவிலக்குகள் உட்பட அதில் இருக்கின்றன என்றும் நான் கருதுகிறேன். இதுகுறித்து, நான் பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் பேசியிருக்கிறேன். இது நீண்டகாலமாகக் குடியிருப்புப் பகுதியாக இருப்பதால், அந்த இடத்தில் இனிமேல் எந்தவகையிலும் யாரும் எந்தக் காரியமும் செய்ய முடியாது. ஆகவே, இதை அரசு பரிசீலிக்க வேண்டும். இந்தமாதிரியான* one-time *பட்டா காலத்திலேகூட பட்டா கொடுக்காமல் இருந்தால், அவர்களுக்கு எப்பொழுது இந்தமாதிரியான பட்டா கிடைக்கும். நான், தேனி, அல்லிநகரத்தை மட்டும் சொல்லவில்லை.*

அதேமாதிரி, பெரியகுளம் நகரத்திலும் இருக்கின்றது. அது டவுன் செட்டில்மென்ட் தாசில்தார்கள் மூலமாகச் செய்து தரப்படுகிறது என்பதன்பேரில், அந்த நடவடிக்கைகளும் மிகவும் காலதாமதமாகின்றன. இன்னும் சொல்லப்போனால், இதற்கான நடவடிக்கைகள் எடுத்ததாக என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. தமிழ்நாட்டில் பல இடங்களில் இதுமாதிரியான பிரச்சினைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கும். என்னுடைய வேண்டுகோள் என்பது, இதுமாதிரியான பிரச்சினைகளை காலத்தில் தீர்க்க வேண்டும். என்னுடைய தொகுதியில் மட்டும் புறவழிச் சாலைகளிலும், வண்டிப்பாதைப் புறம்போக்குகளிலும், வால்கரடு என்ற பகுதியிலும் மற்றும் விவசாயப் பகுதிகளிலும் 6,000, 7,000 என வகை மாற்றம் செய்து தர வேண்டிய வீட்டுமனைகள் இருக்கின்றன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், தயவு செய்து இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து, இந்தப் பகுதிகள் முழுவதற்கும் பட்டா கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம் மற்றும் வட்டம், அல்லிநகரம், எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் புல எண் 2356 ஃபாரஸ்ட் (வால்கரடு) என டவுன் செட்டில்மென்ட் ஆவணங்களில் பாகுபடுத்தப்பட்டு உள்ளது. மேற்கண்ட பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 180 குடும்பங்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாகக் குடியிருந்து வருகின்றன. இப்பகுதியில் குடியிருந்து வருபவர்களில் சுமார் 40 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட பிரிவினரும் மற்றும் 60 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட பிரிவினரும் இருக்கின்றார்கள். இப்பகுதியிலுள்ள வீடுகள் தகரம் மற்றும் காரை வீடுகளாக உள்ளன. இதுதான் தற்போது அங்குள்ள நிலைமை. அது வனப் பகுதியாக உள்ளதால், அதை வகை மாற்றம் செய்வதற்கு—classification—ஐ மாற்றுவதற்கு வனத் துறையிடம் நாம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. வருவாய்த் துறையால் அந்தச் செயலைச் செய்துவிட முடியாது. ஆகவேதான், வகை மாற்றம் செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் One–time Special Scheme–ஐப்பற்றி சொன்னார்கள்.

ஒருமுறை வரன்முறைப்படுத்திக் கொடுக்கின்ற அந்தத் திட்டத்தின்கீழ், ஆட்சேபகரம் இல்லாத நிலங்களிலே, எங்கெங்கு ஆக்கிரமிப்பாளர்கள் இருக்கின்றார்களோ, அவர்களுக்கெல்லாம் வரன்முறைப்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆணை வழங்கியிருக்கிறது. அதனடிப்படையில், பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நடைமுறையில், ஃபாரஸ்ட்டில் இருக்கக்கூடிய இடங்கள் சம்பந்தமாக இந்தமாதிரியான பிரச்சினைகள் இருப்பது உண்மை. ஆனால், வனத் துறையும், வருவாய்த் துறையும் சேர்ந்தால் கண்டிப்பாகச் செய்யலாம். இது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால், நாம் அதன்மீது ஒரு சிரத்தை எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் தொடரும் என்பதால், இரண்டு துறைகளும் சேர்ந்து, மத்திய அரசை அணுகினால் உரிய முறையில் அந்த மக்களுடைய நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கும் என்பது ஒன்று.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துணைக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அதாவது, One time patta *வழங்குவது என்பது இந்த ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியுடன் முடிந்து விட்டது. தமிழ்நாடு முழுவதும் இதுமாதிரியான. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்விதான் கேட்கிறேன். ஒரு வேண்டுகோள்தான், வேறொன்றும் இல்லை.*

2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதுபோல் பேசாமல், கேள்வியைக் கேளுங்கள். ஒரு கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திரு. ஏ. லாசர்: One time patta *வழங்குவது என்பது மார்ச் மாதம் 31 ஆம் தேதியுடன் முடிந்துவிட்டது. தமிழ்நாட்டில் இதுபோன்று இன்னும் பல்லாயிரக்கணக்கான பட்டாக்கள் வழங்கப்பட வேண்டிய சூழ்நிலையில்,* One time patta *வழங்கும் காலத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுகுறித்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* One time special scheme *என்பது, ஒரு முறைதான் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், பெயரிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.* One time special scheme *என்று வைத்துக்கொண்டு, ஒவ்வொரு முறையும் அதற்கு கால நீட்டிப்பு செய்துகொண்டே வருகிறீர்களே என்று நீதிமன்றத்திலேகூட கேட்கிறார்கள். இதுவரை, ஏறத்தாழ 15, 16 முறை அந்தத் திட்டத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த* One time special scheme–*ல்தான் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்பது இல்லை.* R.S.O. *என்று சொல்லக்கூடிய* Revenue Standing Orders–*வருவாய்த் துறை நிலை ஆணை எண் 21–ன்கீழும், இதுபோன்று வரன்முறைப்படுத்தி, பட்டா வழங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதன் மூலமாகவும் பட்டா வழங்கலாம் என்பதுதான் நிதர்சனமான உண்மை. அந்தமாதிரி வரன்முறைப்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலங்கள் எங்கேயாவது இருப்பின்,* Revenue Standing Orders–*வருவாய்த் துறை நிலை ஆணை எண் 21–ன்கீழ் வழங்குவதற்கும் வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட கல்லணை, சிறுவாழை, வடகாடுபட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் அந்த இடத்திலேயே குடியிருப்பு வீட்டுமனைப் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசின் நிலையான கொள்கையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே ஒப்படை செய்வதற்கு எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைகளை ஒப்படை செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையின்கீழ் வருவாய்த் துறை சேவை செய்து வருகிறது. அந்த வகையிலே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, வீட்டுமனை ஒப்படை வருவாய்த் துறை நிலை ஆணை எண் 21–ன் கீழுள்ள வரையறைக்கு அது உட்பட்டிருக்குமானால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலனை செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*